For Private Circulation Only

ECHOES INDIA

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ஜனவரி 2014 மலர் 7, இதழ் 1








## மணப்பாக்கம், டிசம்பர் 31, 2013 - ஜனவரி 1, 2014

கிறிஸ்துமஸ் முடிந்த பிறகு மாஸ்டருக்கு லேசாகக் காய்ச்சல் இருந்ததால் டாக்டர்களுக்கு பெருங்கவலையாக இருந்தது. ஆயினும் 30ம் தேதி மாலைக்குள் அவரது உடல் நிலை முன்னேறியது. புத்தாண்டிற்காக சென்னையிலிருந்தும் மற்ற மையங்களிலிருந்தும் ஏறத்தாழ 8000 அப்யாசிகள் குழுமியிருந்தனர். அப்யாசிகளை தங்க வைப்பதற்காக மேல் தளம் மற்றும் விளையாட்டு மைதானத்திலும் கூடுதலாக இருப்பிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. புத்தாண்டுக்கு முந்திய நாள் தியான மண்டபத்தில் சிறுவர்கள் பங்கேற்ற ஒரு நடன நிகழ்ச்சியை மாஸ்டர் தமது தொலைகாட்சி இணைப்பின் மூலம் பார்த்தார்.


1ம் தேதி காலை, தியானமண்டபமும் மேல்தளங்களும் கொள்ளளவுக்கு நிரம்பியிருந்தன. மாஸ்டர் சத்சங்கம் வழங்குவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் எல்லோரும் ஆச்சரியமும் குதூகலமும் அடையும் வகையில் மாஸ்டர் தியான மண்டபத்திற்கு வந்தார். அவர் எல்லோருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறிய வண்ணம் வந்த போது அங்கே மகிழ்ச்சி பொங்கியது. அது உண்மையில் மாஸ்டரிடமிருந்து கிடைத்த ஒரு பரிசாக இருந்தது. ஒரு மணி நேரம் நடந்த சத்சங்கத்திற்குப் பிறகு அப்யாசி பாடகர்கள் மூன்று பாடல்களைப் பாட அதன் பின் மாஸ்டர், வழக்கம் போல் தமது தெளிவான, சக்தி வாய்ந்த குரலில் உரையாற்றினார்.

அவர் கூறியது என்னவென்றால் ஒருவர் எத்தனை வருடங்கள் தியானம் செய்துள்ளார் என்பதற்கு முக்கியத்துவம் இல்லை. ஏனென்றால் பழங்காலத்தில் முனிவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தியானம் செய்ததாக சொல்லப்பட்டபோதிலும், சகஜ மார்க்கத்தில் பாபுஜி கூறுவது என்னவென்றால் இலக்கை ஒருவருடைய வாழ்நாளிலேயே அடைய முடியும் என்பதாகும்.

"அதனால் இப்போதாவது நீங்கள் விழித்துக் கொண்டு உங்களது இதயங்களிலிருந்து இந்த வெறுப்பை எடுத்தெறியுங்கள். மற்றும் மற்ற மனிதர்களை நிராகரிப்பது, மதிப்பீடு செய்வது போன்றவைகளை விடுங்கள். ஸ்னோவைட் கதையின் ராணியைப் போல, முகம் பார்க்கும் கண்ணாடியில் நீங்கள் யாரென்று பாருங்கள். அவளுக்கு வெறுப்பு அதிகமாகி ஸ்னோவைட்டை அழிக்க விரும்பினாள். ஆனால் நமக்கு, கண்ணாடியில் நம்மை மேலும் மேலும், உண்மையான கண்களுடன், நான் என்ன பார்க்கிறேன் என்று அறிய வேண்டி பார்க்கும் போது, நான் என்னைப் பற்றி முதலில் கணிப்பிடவும் பிறகு திருத்திக்கொண்டு படிப்படியாக பரிணாம வளர்ச்சி ஏணியில் முன்னேறவும் முடியும்." என்று கூறினார். முடிவில் அவர், "நான் உங்களுக்கு இரண்டு அறிவுரைகளைக் கூற விரும்புகிறேன். ஒன்று- 'நேரத்தை வீணாக்காதீர்கள்', மற்றொன்று -'அவர் விரும்பும் எல்லோரையும் விரும்புங்கள்'" என்று கூறினார்.


மாஸ்டர் பிறகு வந்து வெயிலில் அமர்ந்த போது, ஓமேகா பள்ளியின் 11ம் மற்றும் 12ம்வகுப்பு மாணவர்கள் அவரை சந்தித்தனர். மாஸ்டர் அவர்களுடன் பேசுவதிலும், இந்த அற்புதமான நாளில் எல்லோருக்கும் வாழ்த்து கூறுவதுமாக அவர்களுடன் நீண்ட நேரம் கழித்தார்.












## இந்தியாவில் மண்டலங்களின் மறுசீரமைப்பு

மதிப்பிற்குரிய மாஸ்டர் அவர்கள், ஜனவரி 1, 2014ல் இருந்து செயல்படும் வண்ணம், இந்தியாவில் உள்ள மிஷனின் அனைத்து மண்டலங்களையும் மறுசீரமைத்துள்ளார். புதிய மண்டலங்களை, கொடுக்கப்பட்டுள்ள படத்திலும், மண்டலங்கள் மற்றும் அவற்றுக்கான மண்டலப்பொறுப்பாளர்கள் விவரங்களைக் கீழ்க்கண்ட அட்டவணையிலும் காணலாம்.

| மண்டலம் | மண்டலப் பெயர் | மண்டலப் பொறுப்பாளர் | உத்தேசிக்கப்பட்டுள்ள மின் அஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 1 | ஹைதராபாத் மெட்ரோ | ஸ்ரீ உல்லாஸ் ராவ் கும்ளே (ஹைதராபாத்) | zic.ap1@srcm.org |
| 1A | ஆ.பி. வடக்கு | ஸ்ரீ மதுசூதன ராவ் கொத்தபள்ளி(ஹைதராபாத்) | zic.ap1a@srcm.org |
| 1B | ஆ.பி. வடக்கு கடற்கரைப்பகுதி | ஸ்ரீ ஆதிநாராயண மொகந்தி(விசாகப்பட்டினம்) | zic.ap1b@srcm.org |
| 1C | ஆ.பி. தெற்கு கடற்கரைப் பகுதி | ஸ்ரீ M.R. கங்காதர்(நெல்லூர்) | zic.ap1c@srcm.org |
| 1D | ஆ.பி. தெற்கு | ஸ்ரீ கங்காதர தொண்டி ரெட்டி(ஹைதராபாத்) | zic.ap1d@srcm.org |
| 2 | சென்னை மெட்ரோ | காப்டன் வினீத் சிங் ராணாவத்(சென்னை) | zic.tn2@srcm.org |
| 2A | தமிழ் நாடு வடக்கு | ஸ்ரீ B.S.முருகன்(ஓசூர்) | zic.tn2a@srcm.org |
| 2B | தமிழ் நாடு கிழக்கு | ஸ்ரீ T.S. ரகுராம்(திருச்சிராப்பள்ளி) | zic.tn2b@srcm.org |
| 2C | தமிழ் நாடு மேற்கு | ஸ்ரீ T.V.விசுவநாத ராவ்(திருப்பூர்) | zic.tn2c@srcm.org |
| 2D | தமிழ் நாடு தெற்கு | ஸ்ரீ ராமனாதன் ராமசந்த்ரா(மதுரை) | zic.tn2d@srcmorg |

தொடரும்.

## இந்தியாவில் மண்டலங்களின் மறுசீரமைப்பு

(தொடரும்...)

| மண் டலம் | மண்டலப் பெயர் | மண்டலப் பொறுப்பாளர் | உத்தேசிக்கப்பட்டுள்ள மின் அஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 3A | கேரளா தெற்கு | ஸ்ரீK.U. மோகன் (திருச்சூர்) | zic.kl3a@srcm.org |
| 3B | கேரளா வடக்கு | ஸ்ரீ A.K. மோகன்தாஸ்( பாலக்காடு) | zic.kl3b@srcm.org |
| 4 | பெங்களூர் மெட்ரோ | ஸ்ரீ கிரீஷ் டொட்லூர்( பெங்களூர்) | zic.ka4@srcm.org |
| 4A | கர்நாடகா வடக்கு | டாக்டர் கஜேந்திர சிங் (குல்பர்க்கா) | zic.ka4a@srcm.org |
| 4B | கர்நாடகா தெற்கு | ஸ்ரீ. மதுசூதன் கிருஷ்ணசுவாமி(மைசூர்) | zic.ka4b@srcm.org |
| 4C | கர்நாடகா கடற்கரைப் பகுதி | ஸ்ரீ. சுப்பராய பை(விட்டல்) | zic.ka4c@srcm.org |
| 5 | மும்பை மெட்ரோ | ஸ்ரீ துஷார் ப்ரதான்(மும்பை) | zic.mh5@srcm.org |
| 5A | மகாராஷ்டிரா மேற்கு | ஸ்ரீ சுபாஷ் வைத்யா(புனே) | zic.mh5a@srcm.org |
| 5B | மகராஷ்டிரா சென்ட்ரல் | ஸ்ரீ அருண் குமார் சௌஹான் (ஔரங்காபாத்) | zic.mh5b@srcm.org |
| 5C | மகராஷ்டிரா விதர்பா | ஸ்ரீ ராஜேந்திரன் ரத்தினம்(புல்காவ்) | zic.mh5c@srcm.org |
| 6A | குஜராத் வடக்கு | ஸ்ரீ ராஜேஷ் அகர்வால்(அகமதாபாத்) | zic.gj6a@srcm.org |
| 6B | குஜராத் தெற்கு | டாக்டர் சுரேந்திராR அகர்வால்(சூரத்) | zic.gj6b@srcm.org |
| 7A | ராஜஸ்தான் மேற்கு | ஸ்ரீ விகாஸ் மோகே(ஜோத்பூர்) | zic.rj7a@srcm.org |
| 7B | ராஜஸ்தான் கிழக்கு | ஸ்ரீ மதுகர் கொச்சர்(ஜெய்பூர்) | zic.rj7b@srcm.org |
| 8A | ம.பி. மேற்கு | ஸ்ரீ நவீன் மிஷ்ரா(உஜ்ஜைன்) | zic.mp8a@srcm.org |
| 8B | ம.பி.கிழக்கு மேஜர் ஜெனரல் | ரிடயர்ட் ஆனந்த் நாராயண் முத்ரே(ஜபல்பூர்) | zic.mp8b@srcm.org |
| 9 | புது டெல்லி மெட்ரோ | ஸ்ரீ சுதிர் மார்வா(புது டெல்லி) | zic.dl9@srcm.org |
| 10 | பஞ்சாப் | மேஜர் ஜெனரல் (ரிடயர்ட்) ஹர்பஜன் சிங்(சண்டிகர்) | zic.pb10@srcm.org |
| 11A | ஜம்மு & காஷ்மீர் | ஸ்ரீ சுரேந்தர் ஷர்மா(ஜம்மு) | zic.hpjk11@srcm.org |
| 11B | ஹிமாச்சலப்பிரதேசம் | ஸ்ரீ சுரேந்தர் ஷர்மா (ஜம்மு) | zic.hpjk11@srcm.org |
| 12A | உ.பி. மேற்கு | ஸ்ரீ அசோக் குமார் கர்க்(மீரட்) | zic.up12a@srcm.org |
| 12B | உ.பி. ஷாஜஹான்பூர் | ஸ்ரீ ப்ரபாத் குமார் சின்ஹா(பாங்கே கன்ஞ்) | zic.up12b@srcm.org |
| 12C | உ.பி. லக்னோ | ஸ்ரீ ஆஷிஷ் குமார் சிங் (கான்பூர்) | zic.up12c@srcm.org |
| 12D | உ.பி. அலகாபாத் | ஸ்ரீ ஆஷிஷ் குமார் சிங் (கான்பூர்) | zic.up12d@srcm.org |
| 12E | உ.பி. கிழக்கு | ஸ்ரீ அவதேஷ் சிங் (கோரக்பூர்) | zic.up12e@srcm.org |
| 13 | மேற்கு வங்காளம் - கொல்கத்தா | ஸ்ரீ அஜய் குமார் பட்டர் (கொல்கத்தா) | zic.wb13@srcm.org |
| 14 | ஒடிஷா | ஸ்ரீ கந்தர்பா பெஹெரா (புவனேஷ்வர்) | zic.or14@srcm.org |
| 15 | அருணாச்சலப் பரதேசம், கிழக்கு அஸ்ஸாம், நாகாலாந்து | ஸ்ரீ ஈஷ்வர் ப்ரசாத் (தின்சுகியா) | zic.arnl15@srcm.org |
| 16 | மேகாலயா, மேற்கு அஸ்ஸாம், திரிபுரா, மணிப்பூர், மிஸோரம் | ஸ்ரீ தனி சந்த் (கௌஹாத்தி) | zic.as16@srcm.org |
| 17 | பீஹார் | ஸ்ரீ மனோஜ் திவாரி (ராஞ்சி/ கொல்கத்தா) | zic.brjh17@srcm.org |
| 18 | உத்தரகாண்ட் | ஸ்ரீ பூபேந்திர சிங் சௌபால் (அல்மோரா) | zic.uk18@srcm.org |
| 19 | சத்தீஸ்கர் | ஸ்ரீ தீபக் தியாகி (ராய்பூர்) | zic.ct19@srcm.org |
| 20 | ஜார்கண்ட் | ஸ்ரீ மனோஜ் திவாரி (ராஞ்சி/ கொல்கத்தா) | zic.brjh17@srcm.org |
| 21 | ஹரியானா | ஸ்ரீ சத்ய நாராயண் மண்டல் (புது டெல்லி) | zic.hr21@srcm.org |
| 22 | சிக்கிம், மேற்கு வங்காளம்- வடக்கு | ஸ்ரீ ரவீந்திர டெலாங் (காங்டாக்) | zic.si22@srcm.org |




## அக்டோபர் 2013

சீனக் கருத்தரங்கு முடிந்ததும் மாஸ்டருக்கு உடல் நலமாக இல்லாததால், பார்க்க வரும் மக்களை சந்திப்பதைக் கடினமாக உணர்ந்தார். அவரது கால்களின் பிரச்சினை தொடர்ந்ததுடன் முன்னேற்றத்திற்கான அறிகுறி இல்லாமல் இருந்தது. அவரது குதிகால்கள் இன்னும் ரணமாக இருந்ததாலும், டாக்டர்கள் அவரை கால்களைத் தூக்கி வைத்துக் கொண்டால் குணமாக உதவும் என்று கூறியதாலும் அவர் நடப்பதை முற்றிலும் நிறுத்தியிருந்தார்.

அக்டோபர் 12ஆம் தேதியன்று காலை சிற்றுண்டியும், அதைத் தொடர்ந்து திருவள்ளூர் நில திட்டப் பணியைப் பற்றிய ஒரு நீண்ட கலந்துரையாடலுக்கும் பிறகு மாஸ்டர், கால்ஃப் வண்டியில் சுமார் 45 நிமிடங்கள் ஆசிரமத்தை சுற்றி வந்தார். நான்கு பேர் உதவி செய்த போதும் கால்ஃப் வண்டியில் ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்டார்.

மாஸ்டர் மாலை நேரங்களில் தமது படுக்கையறையின் வெளிப்புறத்தில் அமர்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்விடம், காட்டேஜுக்குப் பின்னே, வெயிலில் அமர்வதற்கு நல்ல இடமாக இருந்தது.

அக்டோபர் 13 ஆம் தேதி, ஞாயிறன்று மாஸ்டருக்கு உடல் நலமில்லாததால், சகோ.கம்லேஷ் சத்சங்கங்களை நடத்தியதுடன் சில திருமணங்களையும் நடத்தி வைத்தார். அப்போது தசரா வார முடிவாக இருந்ததனால் ஆசிரமத்தில் நிறைய அப்யாசிகள் இருந்தனர். கீதையைப் பற்றிய கேள்வி பதில் நேரம், சகோ. சக்ரபாணியின் உதவியுடன் காட்டேஜின் கூடத்தில் நடைபெற்றது. அதில் சகோ. ஸான்ஸ்க்ரிட் கண்ணன், பெரும்பாலும் கீதைக்கும் சகஜமார்கத்திற்கும் உள்ள ஒற்றுமைகளை கண்டுபிடிக்க விழையும் வகையான கேள்வி களுக்கு பதிலளித்தார். அத்தகைய ஒரு கலந்துரையாடலின் நடுவில், தமது அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த மாஸ்டர், ஒலிபெருக்கியை எடுத்து தமது கருத்துக்களைக் கூற, எல்லோரும் அவரது குரலைக் கேட்டு ஆச்சரியமுற்றனர். மாஸ்டர், "இலட்சியத்தை அடைய எனக்குத் தெரிந்த மற்றும் நான் மேற்கொண்ட ஒரே, நிச்சயமான வழி சேவை புரிவதே ஆகும்" என்று கூறினார்.

நிகழ்ச்சி முடிந்து கூட்டம் கலைந்தவுடன், மாஸ்டர், காட்டேஜின் கூடத்திற்கு வந்து அன்று காலையில் திருமணமான ஜோடிகளையும், மற்றும் அங்கிருந்த சில அப்யாசிகளையும் சந்தித்தார்.

அக்டோபர் 16ஆம் தேதியன்று, விரைவில் நடக்கவிருக்கும் ப்ரிபெக்டு கருத்தரங்கத்தைப் பற்றி நீண்ட கலந்துரையாடல் நடத்தினார். அவர், 'ப்ரிபெக்டு வேலையை'பற்றி மட்டுமின்றி 'ப்ரிபெக்டு வாழ்க்கையை' பற்றியும் பேசினார்.

### சீன மொழிப் பாடங்கள்

ஒரு நாள் காலை மாஸ்டர் காலைச்சிற்றுண்டிக்குப் பிறகு மிகவும் களைப்புற்று படுக்கையில் படுத்திருந்த போதிலும் அவரால் தூங்க முடியவில்லை. அப்போது இரண்டு சகோதரிகள் அவருக்கு சீன மொழிப் பாடம் நடத்திய போது அவருடைய புத்துணர்ச்சியும் பாடத்தில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் காணமுடிந்தது. பின்னர் அவர் அலுவலகத்திற்கு வந்தார். அவருக்கு எப்படி மொழிகளில் இத்தனை ஆர்வம் ஏற்பட்டது என்று கேட்ட போது மாஸ்டர், "இங்கே பாருங்கள், நான் மனிதர்களை விரும்புகிறேன். அதனால் அவர்களைப் பற்றியும் அவர்களது கலாசாரத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்களுடன் பேச முயற்சிக்கிறேன், அதனால் அவர்களது மொழியைக் கற்க வேண்டும்" என்று கூறினார்.

ஒரு நாள் மாலை காட்டேஜுக்கு வெளியே நிறைய அப்யாசிகள் கூடியிருந்தனர். ஆனால் நேரமாகி விட்டதாலும், மாஸ்டர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்ததாலும் அவர் வெளியே வரும் வாய்ப்பு குறைவாக இருந்தது. திடீரென்று 7 மணிக்கு மாஸ்டர் வெளியே வந்து எல்லோரையும் சந்தித்தார். ஹிந்தியில் பேசிய அவர், "நீங்கள் எல்லோரும் மிக தூரத்திலிருந்து இங்கே ஆசிரமத்திலிருக்க வந்திருப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. பல அப்யாசிகள் மணப்பாக்கத்தில் பணிபுரிய தொண்டூழியர்களாக வர விரும்புகின்றனர். நான் அப்யாசிகளுக்கு சொல்வது என்னவென்றால் முதலில் அவர்களது ஆசிரமங்களை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். அது உங்களுடைய இல்லமாகும். அதைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். உள் மற்றும் வெளித் தூய்மை இரண்டும் சம அளவில் முக்கியமானவையாகும்" என்று கூறினார். அன்பைப் பற்றிப் பேசுகையில் மாஸ்டர் உதாரணமாக கூறியது என்னவென்றால், கிருஷ்ணர் துவாரகையை விட்டுப் போகும் தினம் ராதா, தனக்கு மட்டும் புல்லாங்குழல் வாசிக்கும்படி கிருஷ்ணரைக் கேட்டுக் கொண்ட போது கிருஷ்ணர், "நான் எப்போதும் உனக்காக மட்டும் தான் வாசிக்கிறேன். ஆனால் எல்லோரும் கேட்கிறார்கள்" என்று பதிலளித்தார், என்பதாகும்.

ஞாயிறு அக்டோபர் 20 கீதை கூட்டத்தொடருக்குப் பிறகு மாஸ்டர் நைஸ், பிரான்ஸ் அப்யாசிகளுடன் 'வீடியோ லிங்க்' மூலம் கலந்துரையாடினார். சகோ. பால் ஜெளல் கருத்தரங்கைப் பற்றிப் பேசுகையில் அது எவ்வளவு பயனுள்ளதாக இருந்தது என்று கூறியதும் மாஸ்டர், "இக்கருத்தரங்கம் உங்களை கொஞ்சம் கொஞ்சமாக முன்னே கொண்டு செல்வதை நான் காண்கிறேன்" என்று கூறினார். பின்னர் அவர் "நீங்கள் எல்லோரும் இப்போது மற்றவர்களும் இவ்வாறு செய்ய உதவ வேண்டும். நான் எப்போதும் கூறுவது போல் நாம் நமக்காக மட்டும் முன்னேறுவதில்லை. அது ஒரு முன்னேற்றச்சங்கிலியைப் போன்றதாகும்" என்றார். அவர் இத்தகைய முன்னேற்றத்தை 'காஸ்மிக் ட்ரீ' என்று அழைக்கிறார். அத்தகைய பிரபஞ்ச மரத்தில் எண்ணற்ற இலைகள், எண்ணற்ற கிளைகள், எண்ணற்ற சுள்ளிகள் இருந்தாலும் அவை எல்லாம் ஒன்றேயாகும்.

அவர்கள் வேறுபட்டவர்கள் அல்லர். அவர்கள் அனைவரும் ஒரே மரத்தின் பகுதிகள். "ஆகவே, நாம் எதுவாக



உருவாக்கப்பட்டிருக்கிறோமோ, அதைத்தான் நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்." பிறகு, அவர் இதை உரைகல்லுடன் ஒப்பிட்டு, " உரைகல் என்பது மற்ற பொருட்களை தங்கமாக மட்டும் மாற்றும். ஒரு உரைகல்லைக் கொண்டு மற்றொரு உரைகல்லை உருவாக்கக்கூடிய ஒன்று எனக்கு தேவை என்று என் மாஸ்டர் கூறினார். இந்த வகையில், "நான் சீடர்களை உருவாக்கவில்லை, நான் மாஸ்டர்களை உருவாக்குகிறேன்" என்று என் மாஸ்டர் கூறினார். அனைவரும் மாஸ்டராக இருக்க முடியாது, ஆனால், அனைவரும் மாஸ்டரைப் போல் இருக்க முடியும்" என்று கூறினார். இறுதியில், "ஒரு விதத்தில் உங்களோடு இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், நான் முழுவதும் மகிழ்ச்சியாக இல்லை. ஏனெனில், மற்றொரு விதத்தில் நான் உங்களோடு இல்லாமல் இருப்பது குறித்து நான் மகிழ்ச்சியாக இல்லை." என்று அவர் கூறினார். மேலும்," நான் அங்கு இருக்கிறேன். நீங்கள் அனைவரும் என்னுடன் என் இதயத்தில் இருக்கிறீர்கள். என்னை நம்புங்கள்" என்று மாஸ்டர் கூறினார்.

அவருடைய உடல்நலம் குறித்து பேசுகையில், நலமின்றி இருப்பதாக அவர் உணர்ந்தாலும், தாமதமாக எழுந்திருக்க நேர்ந்தாலும், தான் தயாராவதற்கு, தன்னைத்தானே அதிலிருந்து மீட்டுக் கொணர்ந்து, காலை உணவை உட்கொண்டு, சக்கர நாற்காலியில் வெளியே கிளம்பி விடுவதாக மாஸ்டர் கூறினார். "ஆகவே, முன்பு எப்போதும் நீங்கள் பார்த்திராத வகையில் மிகுந்த புத்துணர்ச்சியுடன் என்னைப் பார்க்கிறீர்கள். ஆகவே, என்னால் இதை செய்ய முடிகிறது என்றால், உங்களாலும் கூட செய்ய முடியும். இனியும் உடல்நலக்குறை இருக்காது; சோர்வு குறித்த புகார்கள் இருக்காது; எப்பொழுது சோர்வாக இருக்கிறீர்களோ, அப்பொழுது எழுந்திருங்கள். எப்பொழுது மன அழுத்தத்தில் இருக்கிறீர்களோ, அப்பொழுதே உங்கள் மன அழுத்தத்தை விட்டு வெளியேறுங்கள். நீங்கள் அதிலேயே தங்கி இருந்தால், அது மிகவும் ஆபத்தானது. இவ்விஷயத்தின் மீது கவனமாக இருங்கள்" என்று மாஸ்டர் கூறினார்.

## சென்னையில் மழை

அக்டோபர் 21 முதல் 23வரை, பலத்த மழை பெய்து கொண்டு இருந்தது. மாஸ்டர், மூச்சுவிட சற்று சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். காலை உணவிற்குப் பிறகு, அவர் மேலும் சிரமப்பட்டார். அதனால் ஆக்சிஜனேற்றியின் உதவியுடன் சுவாசித்தார். தொடர்ந்து மூன்று சந்திப்புக் கூட்டங்களில் அவர் கலந்து கொள்வதாக இருந்தது. ஆகவே, மாஸ்டர் அனைவரையும் ஒரே சமயத்தில் சந்திக்க ஆலோசித்தார். ஆனால், அவர்கள் வெவ்வேறான நேரங்களில் வந்தார்கள். அப்யாசிகளிடத்தில் மாஸ்டர் உரையாற்றுவதற்காக, பிரான்ஸின் மூன்று ஆசிரமத்திற்கும், மணப்பாக்கத்திற்கும் இடையே ஒரு நான்கு வழி காணொலிக் காட்சி கலந்துரையாடலுக்கான ஒரு முன்மொழிதலைப் பற்றிக் கலந்துரையாட பிரெஞ்சு அப்யாசிகள் வந்தனர்.

அதன்பிறகு, மாஸ்டர் வெளியே வந்து, உதவியாளர்களுக்கு நடந்து கொண்டிருந்த பயிற்சியில் உரையாற்றினார். பணிவு, பெருந்தன்மை மற்றும் எளிமை போன்ற பண்புகள், ஒரு அப்யாசியிடத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள பண்பாகவே இருக்க வேண்டும். போலித்தனமான பணிவு என்பது தவிர்க்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். மேலும் சகஜ மார்க்கப் பயிற்சி முறையின் அனைத்து வழிமுறைகளிலும் ஒருவர் தனது கவனத்தை வைத்திருக்க வேண்டும் என்றும் கூறினார். பிரிபெக்ட் பயிற்சி பெறுபவர்களும் அங்கு வந்து, மாஸ்டர் முன்பாக அமர்ந்திருந்தனர். உரையாற்றிய பின்னர், ஒரு சிட்டிங் கொடுக்க மாஸ்டர் தீர்மானித்தார். 35 நிமிடங்கள் நீடித்த அந்த சிட்டிங்கிற்குப் பிறகு, ஏறத்தாழ முழுவதுமாக அவர் சுவாசிக்க முடியாமல் இருந்தார்.

## பிரிபெக்ட் பயிற்சிப் பணிமனை

பிரிபெக்ட் பயிற்சி பெறும் ஒரு குழுவினர், 2 வார "பிரிபெக்ட் பயிற்சிப் பணிமனை" க்காக வந்திருந்தனர். பல்வேறு மையங்களில் இருந்து பிரிபெக்ட் பயிற்சி பெறுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டவர்கள் அனைவரும், இந்த பணிமனையில் வந்து கலந்து கொண்டு பயிற்சி பெற்று, பயிற்சியின் முடிவில் பிரிபெக்ட்களாகத் தயார் செய்யபட்டனர். இது ஒரு புதிய வழிமுறையாகும். இரண்டாவது வாரத்தின் பொழுது, 22 பிரிபெக்ட் பயிற்சி பெறுபவர்களும் மாஸ்டரைச் சந்திக்க முடிந்தது. பிரிபெக்ட்கள் அனைவரும் முதலில் அப்யாசிகள் ஆவர். மேலும் இது ஒரு பொறுப்பு மட்டும் அல்ல; சகஜ மார்க்கத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கான ஒரு நம்பிக்கை உடன்படிக்கை ஆகும் என்ற உண்மையை பிரிபெக்ட்டுகளிடத்தில் அவர் வலியுறுத்தினார். உண்மையாக எத்தனை பேர் பயிற்சியை தொடர்ந்து செய்கிறார்கள் என்று கேட்டார். பிறகு அவர்களுக்கு ஒரு மணிநேரம் அவர் சிட்டிங் கொடுத்தார்.

## அப்யாசிகளுடன்

இந்நாட்களில் மாஸ்டர் அடிக்கடி தனது படுக்கையறையின் பின்பகுதியில் உள்ள பகுதியில் சூரிய ஒளியில் அமர்ந்து தனது காலை உணவை எடுத்துக் கொள்கிறார். ஒருநாள் காலை பேசுகின்ற மனநிலையில் இருந்த அவர், உலகளாவிய சேவைக் குழு (GST) இருந்தபோது, மிஷனில் நடந்து கொண்டிருப்பவைகளிலிருந்து நான் விலக்கி வைக்கப்பட்டு இருந்ததாக உணர்ந்தேன்" என்று அவர் கூறினார்.

என்ன நடந்து கொண்டிருந்தது என எனக்குத் தெரியாது.








இவைகள் யாவும் இத்தகைய விஷயங்களால் நான் தொந்தரவு அடையக்கூடாது என்ற எண்ணத்தில் நிகழ்ந்தவை. ஆனால் எனக்குத் தொந்தரவு கொடுக்கப்படுவதையே நான் விரும்புகிறேன்" என்றார். மேலும் அப்யாசிகளை குறிப்பிட்ட நேரங்களில் தொடர்ந்து சந்திக்க விரும்புவதாகவும் மாஸ்டர் கூறினார். "நான் என்னுடைய படுக்கை அறையில் மருத்துவர்கள் சூழ்ந்திருக்க அடைபட்டு இருக்கும் போது நான் மிகவும் தனிமையில் இருப்பதாக உணர்கிறேன்" என்றார்.

மாலையில் சத்சங்கம் முடிந்தவுடன் வெளி நாட்டில் இருந்து வந்திருந்த அனைத்து அப்யாசிகளையும் மாஸ்டர் அழைத்து, அவர்களை குடிலுக்கு வெளியே சந்தித்தார். சுமார் 30 நிமிடங்களுக்கு பொதுவான உரையாடல் நிகழ்ந்தது. திடீரென மாஸ்டர் அமைதியானார். அப்யாசிகளும் அமைதியானார்கள். அது ஒரு முழுமையான அசைவற்ற அமைதியான நேரமாக இருந்தது. 15-20 நிமிடங்கள் வரை நீடித்த இந்த அமைதிக்கு இயற்கையும் ஒத்துழைப்பு அளித்தது போல் இருந்தது. பிறகு மாஸ்டர் பிரான்ஸில் உள்ள மிஷன் பற்றிப் பேசத்தொடங்கினார்.

## நவம்பர் 2013

### செயற்குழுக் கூட்டம்

தீபாவளியின் முன்தினம் மாலையில், மாஸ்டரின் குடிலில் செயற்குழுவின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்பாக அவர்களில் சிலர் மாஸ்டரை அலுவலகத்தில் சந்தித்தனர். சகோ.ஜாக்கி அவரிடம் சீதாதேவி காட்டிற்குச் செல்வதை ஞானதிருஷ்டியில் கண்ட ஒரு ரிஷியை பற்றி கேட்டார். அவர் அவளுடைய எதிர்காலத்தை மாற்றி துன்பத்தை தவிர்த்திருக்க இயலாதா? "அது ஸ்ரீராமனின் திட்டம் என்றாலன்றி ரிஷியால் அதனை செய்ய இயலாது. இரண்டாவதாக நாம் சில சம்ஸ்காரங்களுடன் கீழே இறங்கி வருகிறோம். உலக வாழ்க்கையில் நடைபெறுவதை நம்மால் மாற்ற இயலாது. பரிணாம வளர்ச்சிப் பற்றி பேசும்போது, அது ஆன்மீக பரிணாம வளச்சியைப் பற்றியதாகத்தான் பெரும்பாலும் இருக்கவேண்டும். உலகியல் பரிணாம வளர்ச்சியைப் பற்றியதாக இருக்கக்கூடாது. அது எவ்வாறாகிலும் நடந்து விடும்." என்று மாஸ்டர் கூறினார். தொடர்ந்து மாஸ்டர், "ராமர் அவரிடம் உள்ள தெய்வீகத்தினை உணர்ந்து கொள்ளாத காரணத்தினால் அவர் முழுமையான அவதாரம் அல்ல எனக்கூறப்படுகிறது. பகவான் கிருஷ்ணர் அவருடைய தெய்வீகத்தினை அறிந்திருந்தார். எனவே, அது உணர்வு நிலையின் பரிணாம வளர்ச்சி. நமது பிரார்த்தனை நமது உணர்வு நிலையின் பரிணாம வளர்ச்சிக்காகவே இருக்கவேண்டும்." என்றார்.

சகோ.கமலேஷ் செயற்குழுக்கூட்டத்தினை இரண்டு மணி நேரம் நடத்தினார். ஒவ்வொரு ஆண்டும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களுக்கு ஓய்வு அளித்து புதிய உறுப்பினர்களை நியமனம் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்த மாஸ்டரின் உத்தரவினை இறுதியில் வாசித்தார். அச்சமயம் மாஸ்டர் தன் சக்கர நாற்காலியில் அங்கு வந்து முடிவுரையாக சில கருத்துக்களை கூறினார். பின்னர் அவர் மதிய உணவுக்குச் சென்றார்.

### தீபாவளி பண்டிகை: நவம்பர் 2-3,2013

5000க்கும் மேலான மக்கள், 2 நாட்களிலும் நடைபெற்ற சத்சங்கத்திற்காக பெருந்திரளாக ஒன்று கூடினர். அமைப்பாளர்கள் இந்தக் கூட்டத்தினை சமாளிக்க நன்கு திட்டமிட்டு தயாராய் இருந்தனர். சனிக்கிழமையன்று, மாஸ்டர் அவரது அறையில் அதிக எண்ணிக்கையிலான அப்யாசிகளைச் சந்தித்தார். அவர் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தார். ஒவ்வொருவரையும் வரவேற்றார். இரண்டு நாட்களிலும் மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். சகோ.கமலேஷ் சமீபத்தில் பெற்ற மென்குரல் செய்திகளை வாசித்தார்.

நவம்பர் 5ம் தேதி, தமிழ்நாட்டின் தென் கோடியில் உள்ள வடக்கன்குளத்தில் இருந்து வந்த சில அப்யாசிகளை மாஸ்டர் வரவேற்றார். அவர்கள் ஆசிரமம் ஒன்றை கட்டி முடித்து அதனை மிஷனுக்கு நன்கொடையாக அளிப்பதற்குரிய ஆவணங்களை ஒப்படைக்க வந்து இருந்தார்கள்.

8 ம் தேதி மாஸ்டர் சகோ.கமலேஷ் உடன், ஒழுக்கம் மற்றும் நன்னடத்தை குறித்து விவாதித்தார். அவர் மிஷனுக்கு எதிரான வழக்குகளின் எண்ணிக்கைக் குறித்து மிகவும் கவலை அடைந்தார். தன் பிரதிநிதியிடம் இவற்றை சமாளிக்கும்படி விட்டுவிட விரும்பவில்லை.

## ஒமேகா பள்ளிக் குழந்தைகளுடன்

நவம்பர் 9ம் தேதி சனிக்கிழமை மாலையில், மாஸ்டர், கால் பந்து போட்டியில் வெற்றி பெற்று, அடுத்தகட்டமாக தேசிய அளவில் விளையாடவிருக்கும் ஒமேகா பள்ளி மாணவர்களை சந்தித்தார். அவர்களுக்கு தன் வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்கினார். அவர் மாணவர்களை பார்த்து,' நீங்கள் எல்லோரும் விளையாட்டை விளையாட்டாக மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். வெற்றி பெறுவது மட்டுமே குறிக்கோளல்ல. இருவர் விளையாடுகையில், ஒருவர் தோற்பது இயல்பே. ஆனால் நாம் விளையாட்டு பண்பினை மிக முக்கியமான ஒன்றாக கருத வேண்டும்' என அறிவுறுத்தினார்.

## பிரஞ்சு கருத்தரங்கம்

நவம்பர் 10ம் தேதி ஞாயிறன்று, நைஸ், மான்ட்பெல்லியர் மற்றும் பாரிஸ் ஆசிரமங்களின் அப்யாசிகளை, ஒரு சேர திரையில், மாஸ்டரால் காண முடிந்தது. அதனால் கவரப்பட்டு, வரும் காலத்தில், மேலும் பல ஆசிரமங்களை



இதே போல் கண்டு, அந்த அப்யாசிகளுடன் ஒருசேர அளவளாவ முடியும் ஒரு நாள் வரும் என நம்பிக்கை தெரிவித்தார். சிறு உரை மற்றும் சத்சங்கத்திற்கு பின் இக்கூட்டம் நிறைவுற்றது. மாலையில் கலையரங்கத்தில் தொடர்ந்த நிகழ்ச்சியில், சகோ. கம்லேஷ் இம்மூன்று ஆசிரமங்களிலிருக்கும் அப்யாசிகளுடன் அளவளாவினார். அது ஒரு வினா - விடை நிகழ்வாக இருந்தது. தொகுத்தளித்த பத்து வினாக்களுக்கு விடையளித்தார்.

## சகோ.மாதவாவின் இல்லத்தில்

மாஸ்டர், ஆசிரமத்திற்கு சிறிதே பின் அமைந்திருக்கும் சகோ. மாதவாவின் இல்லத்தில், நவம்பர் 10ம் தேதியிலிருந்து நவம்பர் 18ம் தேதி வரை தங்கியிருந்தார். மாஸ்டருக்கு இது ஒரு மாறுதலாகவும், மகிழ்ச்சி அளிக்கும் விதமாகவும் அமைந்தது. 11ம் தேதி மாலை மாஸ்டருக்காக, ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரஷ்ய கூட்டமைப்பின் பிரதிநிதி திரு.நிகொலாய் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார். அவரின் வரவேற்பு சிறப்புற அமைய மாஸ்டர் கவனம் செலுத்தினார். ரஷ்யாவிலிருந்து வந்திருந்த ஒரு கலைஞர், பல மணிகள், பல்வேறு அளவுகளில் அமைந்த பித்தளை தகடுகளை கொண்டு ' ரஷ்யாவின் பாடும் மணிகள்' என்ற வாத்திய நிகழ்ச்சியை நடத்தினார்.

சகோ. மாதவாவின் இல்லத்தில் இருந்த நாட்களில், மாஸ்டர், காலையில் தன் பணிகளை முடித்த பின், அங்கு குழுமியிருந்தோருக்கு சிட்டிங் கொடுப்பார். அதே போல் மாலை ஓய்விற்குப்பின், பல்வேறு மையங்களிலிருந்து வருகை புரியும் அநேக அப்யாசிகளுக்கு சிட்டிங் கொடுப்பார். அவர்களுடன் சிறிது நேரம் இருந்த பின் தன் படுக்கை அறைக்கு திரும்பி, உடற்பயிற்சி சிகிச்சை வல்லுநருடன் தன் சிகிச்சையை மேற்கொள்ளுவார். மாஸ்டர், தனக்கு மிகவும் தேவையாயிருந்த ஓய்வைப் பெற்றதுடன், அப்யாசிகளையும் சந்தித்தார். 18ம் தேதியன்று ஆசிரமத்திற்குத் திரும்பினார்.



## நடைமுறைக்கு திரும்புதல்

சனிக்கிழமை நவம்பர் 30, 2013: காலை முழுவதும் மாஸ்டர் தன் பணிகளிலும், கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். மிஷனின் பதிப்புக்களை சீராக கால இடைவெளி விட்டு வெளியிடும் படி அறிவுறுத்தினார். இதனால் அப்யாசிகளுக்கு, ஒரே நேரத்தில் பல புத்தகங்கள் வாங்கும் பளு இருக்காது எனக் கூறினார்.

பிறகு உரையாடல், அடுத்த ஆண்டு வரவிருக்கும் விழாக்களைப் பற்றியதாக மாறியது. பூஜ்யஸ்ரீ லாலாஜி மற்றும் பூஜ்யஸ்ரீ பாபூஜியின் பிறந்த நாள் விழாக்களை திருப்பூரில் கொண்டாடவும், மாஸ்டரின் பிறந்த நாள் விழா, சமீபத்தில் திருவள்ளூரில் வாங்கப்பட்ட இடத்தில் நடத்தவும் முடிவெடுக்கப்பட்டது.

## பயணம் செய்ய ஆர்வம்

மாஸ்டர் மீண்டும் பயணம் செய்ய ஆவலுடன் இருப்பது தெளிவாக தெரிகிறது. சகோ.கமலேஷ் படேலையும், மற்றவர்களையும் சந்திக்கும் போது இந்த ஆர்வம் மேலெழுகிறது. அவர் சகோ.கமலேஷ் படேலிடம், "என் உடல் நிலை சரியானவுடன், நீயும், நானும் வடக்கன்குளம்




செல்லவேண்டும். இப்பொழுது என் உடல் நிலை சரியாக இருக்கிறது. ஆனால், என் உடல்நிலை சரியில்லாததற்கு முன்பு நான் இருந்தது போல, ஊன்று கோலுடன் அல்லது மற்றவர்கள் உதவியுடன் சில அடிகள் நடக்க சக்தி வேண்டும்" என்று கூறினார். பயணிப்பதற்கு பல்வேறு வழி களை தேர்ந்தெடுத்து, இறுதியில் சாலை வழியாக பயணி ப்பதாக முடிவெடுத்து, அதற்கான வழியினையும் திட்டமிட்டார்.

மற்றோரு சமயத்தில் மின்ஸ்க் செல்வதைப் பற்றி பேசினார். மாஸ்டர், அவருடன் பிரயாணம் செய்பவர்களின் பெயர்களை பட்டியலிட்டார். அவர் தனக்கு ஷாஜஹான்பூர் செல்ல விருப்பமாக இருப்பதாக சொன்னார். ஆனால் அதை அறிவிக்காமல் செல்ல வேண்டும் என்றும், இல்லையெனில் சமாளிக்க முடியாத கூட்டம் இருக்கும் என்றும் கூறினார்.

### பணி செய்வதில் பேரார்வம்

தளராமல் பணியை அவர் தன் மீது குவித்துகொள்ள, அதே உற்சாகம் அவரை ஊக்குவிக்கிறது. SMSF விஷயங்களை ஏன் அதிகாரிகளை நியமிக்காமல் அவரே கவனிக்கிறார் என்று கேட்டதற்கு, "என்னால் எல்லாம் செய்யமுடியும்" என்றார். மேலும், "நான் வாழ்கிறேன், ஏனென்றால் நான் வேலை செய்கிறேன், வேலை செய்யவில்லை என்றால் ஐந்து வருடங்களுக்கு முன்பே இறந்திருப்பேன்" என்றார்.

### மாஸ்டரின் சமீபத்திய பணித்திட்டம் - திருவள்ளூர்

மாஸ்டர் சகோ. P.R.கிருஷ்ணாவை திருவள்ளூரிலிருக்கும் இடத்தை (113 ஏக்கர்) பார்த்துக்கொள்ளவும், ஜுலை 2014 ல் அவருடய பிறந்த நாள் விழாவை ஒருங்கிணைப்பதற்கும் நியமித்திருக்கிறார். SMSF செயற்பாடுகளுக்கான, அடிப்படைத் தேவைகளின் வளர்ச்சியையும், மற்றும் நீர் வளம் நிறைந்த விளைநிலத்தில் தொடர்ந்து விவசாயம் நடப்பதையும் மாஸ்டர் மேற்பார்வையிடுகிறார்.

*சகஜ் சந்தேஷ் எண் : 2013.54*

புதன்கிழமை, 18 டிசம்பர் 2013

அன்பு சகோதர, சகோதரிகளே,

இந்த வருடம் (2014) மூன்று விழாக்கள் நடத்த திட்டமி டப்பட்டுள்ளது. அவை, பிப்ரவரி 2ம் தேதி லாலாஜி மகராஜ் பிறந்த நாள் விழா (நான்கு நாட்கள் - பிப்ரவரி 1, 2, 3 மற்றும் 4), பாபூஜி மகராஜ் பிறந்த நாள் விழா ஏப்ரல் 29, 30 மற்றும் மே 1 , இவை இரண்டும் டி. ஜே. பார்க், திருப்பூர், இந்தியாவிலும், மிஷனின் தற்போதைய தலைவர் பிறந்த நாள் விழா, சென்னை அருகே திருவள்ளூர், இந்தியாவில், ஜுலை, 23,24 மற்றும் 25 ஆகிய தேதிகளிலும் ஆகும். இறுதியாக குறிப்பிடப்பட்ட விழா, அண்மையில் திருவள்ளூரில் பெறப்பட்ட, மாற்றும் வழி முறையில் உள்ள விவசாய நிலத்தில் நடத்த திட்டமிடப்ட்டுள்ளது.

இந்நாட்களில் உள்ள அதிகமான செலவினங்களை கருத்தில் கொண்டு அப்யாசிகள் மூன்று விழாக்களில் ஏதேனும் ஒரு விழாவைத் தேர்ந்தெடுத்து, விரைவில் பதிவு செய்யுமாறு நான் பரிந்துரைக்கிறேன். இதனால் ஒவ்வொரு விழாவிற்கும் எத்தனை அப்யாசிகள் கலந்துகொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து திட்டமிடலாம்.

இது அப்யாசிகள் தங்கள் குடும்பத்துடன் கலந்துகொள்ள ஏற்றதாக இருக்கும். ஒரு அப்யாசி மூன்று விழாக்களிலும் பங்கேற்க வேண்டுமென்றால் குடும்பத்தை அழைத்து வருவது மிகவும் கடினமாக இருக்கும். இந்த வேண்டுகோளை தயவுசெய்து முக்கியமானதாகக் கருதி ஏதேனும் ஒரு விழாவிற்கு, கூடிய விரைவில் பதிவு செய்யுங்கள்.

எந்த விழாவிற்கும் வர இயலாத அப்யாசிகள், அவர்கள் இருக்குமிடத்திலேயே, அவர்களுடைய மையங்களில் பங்கேற்கலாம். இந்நிலையில் விழாக்கள் ஒரு நாள் மட்டுமே நடைபெறும் - அதாவது, பிப்ரவரி 2, ஏப்ரல் 30மற்றும் ஜுலை 24). வழக்கம்போல் அப்யாசிகள் முடிந்தவரை தங்களுக்கு அருகிலிருக்கும் ஆசிரமத்திற்குச் சென்று பங்கேற்கும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள். இல்லையெனில், இன்றைய பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, அவரவர் வீட்டிலேயே இருப்பது சாத்தியம்.

எல்லோருக்கும் என் ஆசிர்வாதங்கள்.

பா.ராஜகோபாலாச்சாரி

## புதிய நியமனங்கள்

**சகோ. பூரன்மல் பைன்தா**

ஆசிரம மேலாளர் - ஜெய்பூர்

## ப்ரிபெக்ட் கூட்டங்கள்

### புதிய ப்ரிபெக்ட்கள் பயிற்சி கருத்தரங்கு, மணப்பாக்கம்



ப்ரிபெக்ட்டுகளின் சேவைத் தரத்தை மேலும் மேன்படுத்தவதற்காக மாஸ்டர், ஒரு புதிய பயிற்சிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த 2 வாரப்பயிற்சி, பயிற்சி யாளர்களுக்கு ஆழமான அறிவு, உறுதி மற்றும் தெளிவான நோக்கத்தை தெரிந்து கொள்ள உதவி புரிவதாக அமைந்துள்ளது. 22 உறுப்பினர்களைக்கொண்ட இரண்டு குழுக்கள், மணப்பக்கத்தில் அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடைபெற்ற இந்த பயிற்சியில் பங்கு பெற்று ப்ரிபெக்ட்டுகளாக பணிபுரிய அனுமதிக்கப் பட்டுள்ளனர். அதில் பங்கு பெற்றவர்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பிரிபெக்ட்டுகள் இல்லாத மையங்களிலிருந்தும் வந்திருந்தனர். மாஸ்டர் அவர்களுடன் தனிப்பட்ட முறையில் உரையாடியும், சிட்டிங் கொடுத்தும், ப்ரிபெக்ட்டுகளாக அவர்களின் வாழ்க்கை முறைக்குத் தயார்படுத்தினார்.

### லக்னோ, உத்திரப்பிரதேசம்

NCR, உத்தரகண்ட், மேற்கு உ.பி மற்றும் மத்திய உ.பி மண்டலங்களைச்சேர்ந்த 88 ப்ரிபெக்ட்டுகள், லக்னோ BMA ஆசிரமத்தில், 20 முதல் 24 நவம்பர் வரை நடைபெற்ற 'Deepening Prefects Experience' (ப்ரிபெக்டுகளின் அனுபவங்களை ஆழமாக்குதல்) என்ற நிகழ்ச்சியில் கல்ந்துகொண்டனர். இந்நிகழ்ச்சி வெறும் விரிவுரைகளைக் கேட்பதோடு மட்டுமின்றி, தங்களை சுயபரிசோதனை செய்ய வேண்டிய அவசியத்தையும், அவரவர் அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதையும், முக்கிய நோக்கமாக கொண்டிருந்தது. அங்கு ஒலிபரப்பு செய்யப்பட்ட மாஸ்டருடைய பல்வேறு உரைகள், பங்கேற்பாளர்களின் சுயபரிசோதனை மற்றும் புரிந்து கொள்ளுதலுக்கு உதவியாக இருந்தது. அவர்களின் முக மலர்ச்சியிலிருந்து இந்நிகழ்ச்சியின் பலனை உணர முடிந்தது. அவர்கள் அனைவரும், முழு மனிதர்களாகவும், உண்மையான அப்யாசிகளாகவும் மாறவும், பூரணமான ப்ரிபெக்ட்டுகளாக இருக்கவும் உறுதிபூண்டனர்.

### சோனெபட், ஹரியானா

ஹரியானாவில் உள்ள சோனெபட் ஆசிரமத்தில், நவம்பர் 10ம் தேதி, 13 ப்ரிபெக்ட்டுகள் சந்திப்பு நடைபெற்றது. அதில் மண்டல ஒருங்கிணைப்பாளர் [ZiC], சகோ.கமலேஷ் பட்டேலுடன் நடைபெற்ற ஒருங்கிணைப்பாளர் சந்திப்பில் பேசப்பட்ட விஷயங்களைப்பற்றி கலந்துரையாடினார். மதியம் ஒரு மணி வரை நடந்த இந்த சந்திப்பு, மதிய உணவிற்குப்பின்னர் முடிவுற்றது.

### லூதியானா, பஞ்சாப்

பஞ்சாப், சண்டிகர், அம்பாலா மற்றும் மண்டி டப்வாலியை சேர்ந்த ப்ரிபெக்ட்டுகள் 17 நவம்பர் அன்று லூதியானாவில் சந்தித்தனர். சுமார் 20 பிரிபெக்ட்டுகள் கலந்துகொண்ட இந்த சந்திப்பு, மண்டல ஒருங்கிணைப்பாளர் [ZiC] சகோ.மேஜர் ஜெனரல் (ரிடயர்ட்) ஹர்பஜன் சிங் - தலைமையில் நடைபெற்றது. அவரின் பேச்சின் நோக்கம், அந்த மண்டலத்தை சேர்ந்த பிரிபெக்ட்டுகள் மற்றும் அப்யாசிகள் ஊக்குவிக்கும் முயற்சிகளை பற்றியிருந்தது. தன்னார்வத்தொண்டர்களின் பணி, பயிற்சி திட்டங்கள், மிஷன் புத்தகம் படித்தல், மாத ப்ரிபெக்ட் சந்திப்புகள், மிஷனில் குழந்தைகள் பங்கேற்பது, மற்றும் அக்கம் பக்கம் சுற்றியுள்ளவர்கள் தெரிந்துகொள்ள வசதியாக முறைசாரா சந்திப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. அனைவரும், அவரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டனர்.





# செயலர்களின் சுற்றுப்பயணம்

## தென் தமிழ் நாட்டின் மையங்களுக்கு மண்டலப் பொறுப்பாளரின் வருகை

அக்டோபர் 19-அன்று, சகோ. N. பிரகாஷ் மற்றும் ZiC சகோ. T.V.விஸ்வநாத ராவ் ஆகியோர் ஸ்ரீவில்லிபுத்தூரை அடைந்து





அப்யாசிகளுடன் சேர்ந்து மரக்கன்றுகளை நட்டனர். இதனைத் தொடர்ந்து மைய மேம்பாட்டிற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. ப்ரிபெக்ட்களின் ஒரு குழுவுடன் அவர்கள் கலசலிங்கம் பல்கலைக் கழகத்திற்குச் சென்று, அங்கு 70 MBA மாணவர்களுக்கு ஒரு வரவேற்புக் கூட்டம் நடத்தினர். அப்பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவர் மற்றும் பதிவாளர் ஆகியோர், இந்த மாதிரியான வரவேற்புக் கூட்டங்களை, அனைத்து கல்லூரிகளிலும் நடத்தப்பட முன்மொழிந்ததுடன், விருப்பமுள்ள மாணவர்களுக்கு சகஜ மார்க்கம் பற்றிய ஒரு வாரத்திற்கான கருத்தரங்கை நடத்தவும் இசைவு தெரிவித்தனர்.

இந்த குழுவினர் இராஜபாளையத்திற்கு பயணம் செய்து, சத்சங்கத்திற்கு பின்னர், ஒரு முறை சாரா கலந்துரையாடலை நடத்திவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு, இரவு விருதுநகர் ஆசிரமத்தை அடைந்தனர். 20 அக்டோபர் அன்று காலை சத்சங்கம் முடிந்த பின்பு, விருது நகர் மற்றும் அருப்புக்கோட்டை மையங்களைச் சேர்ந்த அப்யாசிகளுக்கு, ஆசிரம சுற்றுபுறத்தை பராமரிப்பதை மையமாக வைத்து ஒரு கூட்டம் நடைபெற்றது. முற்பகல் சுமார் 11.00 மணிக்கு சகோ. ராவ் மற்றும் சகோ. பிரகாஷ் திருப்பூருக்கு புறப்பட்டு சென்றனர்.

## இணைச் செயலாளரின் தென்தமிழ் நாட்டுப் பயணம்

22 நவம்பர் அன்று, இணைச் செயலாளர் சகோ. A.P. துரை, மானாமதுரை, சிவகங்கை மற்றும் மேலூர் மையங்களுக்கு வருகை புரிந்தார். அவ்விடங்களில் அவர் சத்சங்கம் நடத்தி, அப்யாசிகளை, கலந்துரையாடல்களில் பங்கேற்று, சாதனா பற்றியதான தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு ஊக்குவித்தார்.

23 நவம்பர் அன்று, அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று அங்கு சத்சங்கத்திற்கு பின், சகஜ மார்க்க பயிற்சியின்போது மதம், மொழி, ஜாதி, மதக்கோட்பாடுகள் மற்றும் நாகரீகத்திலிருந்து விலகி நிற்க வேண்டியதைக் குறித்து உரையாற்றினார். அவர் அப்யாசிகளை சகஜ மார்க்கம் மற்றும் நிலையான நினைவு குறித்து பேச ஊக்கமளித்தார். மாலை சுமார் 4.00 மணியளவில், ஒரு வரவேற்புக் கூட்டத்திற்காக, மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலுள்ள ஒரு கிராமமான சேது நாராயணபுரத்திற்குச் சென்றார். அதில் 20 பேர் கலந்து கொண்டனர். அவர், பேரையூர் துணை மையத்திற்கு சென்று அங்கு கலந்துரையாடல் மற்றும் சத்சங்கத்தை நடத்திவிட்டு மதுரை திரும்பினார்.

24-ஆம் தேதி அன்று அவர், மதுரை ஆசிரமத்தில், மதுரை மற்றும் அதனருகினிலிருக்கும் மையங்களைச் சேர்ந்த 560 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். காலையில் குழு கலந்துரையாடல் மற்றும் தலைப்புகளிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பேசுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மதியம், அவர் இளைஞர் குழு உறுப்பினர்களுடன், சகஜ மார்க்கத்தைப் பரப்புதல் மற்றும் அவர்களின் மையத்தை ஒருங்கிணைப்பதற்கான அவர்களின் திட்டங்கள் என்ன என்பது பற்றி பேசுமாறு கேட்டுக் கொண்டார். இந்த முழு நாள் நிகழ்ச்சியை சத்சங்கத்துடன் முடித்து வைத்தார்.

## வட கர்நாடகத்தில் சகோ. ராஜேஷ் ராத்தோடின் வருகை

15-17 நவம்பர் சகோ.ராஜேஷ் ராத்தோட், ராய்ச்சூர், சோராபூர், சேதம், ஹம்னாபாத், பிதர் மற்றும் குல்பர்காவிற்கு பயணம் மேற்கொண்டார். சகோ. ராஜேஷ், ஆறு அப்யாசிகள் கொண்ட குழு ஒன்றுடன், இந்த மையங்களுக்கு பயணம் செய்து, சத்சங்கங்கள் நடத்தி அப்யாசிகளிடையே உரையாற்றினார்.

17 ஆம் தேதி அன்று, குல்பர்கா ஆசிரமத்தில், ஒரு முழு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் குல்பர்கா மற்றும் அதன் அருகிலிருக்கும் துணை மையங்களைச் சேர்ந்த 250 அப்யாசிகள் பங்கேற்றனர். மூன்று சத்சங்கங்கள் நடத்தப்பட்டன. சகோ. ராஜேஷின் உரையைத் தொடர்ந்து, அப்யாசிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியும், ஒரு பிரிபெக்ட்களின் கூட்டமும் நடைபெற்றது. அனைத்து மையங்களிலிருந்தும் அப்யாசிகள் பங்கேற்றதில் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பலர், அந்த சூழ்நிலை மாஸ்டரின் பிரசன்னத்தாலும், அன்பாலும் நிறைந்துள்ளதை உணர்ந்தனர்.



### எம்மிங்கனூர் ஆசிரமம் திறப்பு விழா, ஆ.பி.



அன்புக்குரிய மாஸ்டர் நவம்பர் 3ம் தேதி, தீப ஒளித் திருநாள் அன்று, எம்மிங்கனூர் ஆசிரமத்தை திறந்து வைத்தார். இந்த ஆசிரமம் ஆந்திரப்பிரதேசத்தில் குர்னூல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஆசிரமத்தின் அடிக்கல், 2007ல் சகோ. அஜய் பட்டரால் நடப்பட்டது. ஆசிரமம் 2.5 ஏக்கர் அளவில், 7 அடி உயர சுற்றுச்சுவரால் சூழப்பட்டு அமைந்துள்ளது. சுமார் 400 அப்யாசிகள் வசதியாக அமரும் வகையில், தியானக்கூடம் உள்ளது. மேலும் சமையலறை மற்றும் குளியலறைப் பிரிவும் உள்ளது. ஆசிரமம், அடோனி சாலையின் மீது அமைந்துள்ளதால், சாலை வழி மற்றும் ரயில் வழியில் அணுக ஏற்றவாறு உள்ளது. 6 ஏக்கர் அளவுள்ள அப்யாசி காலனியால் ஆசிரமம் சூழப்பட்டுள்ளது. மாஸ்டர் கட்டுமப் பணியில் முழு மகிழ்ச்சியடைந்து, உள்ளூர் அப்யாசிகளால் செய்து முடிக்கப்பட்ட பணியைப் பாராட்டினார்.

### பிராந்தியக் கூட்டங்கள், வடக்கு கர்நாடகம்



அக்டோபர் 27 அன்று, பசவகல்யாண், பீதர், ஹம்னாபாத், பால்கி, தனகுஷ்னூர் மற்றும் குல்பர்காவிலிருந்து வந்திருந்த சுமார் 140அப்யாசிகள், பசவகல்யாணில், சிவயோகி கல்லூரியில் கூடினர். உள்ளூர் அப்யாசிகளை ஊக்கப்படுத்தி, மிஷனை முழுமையாகப் புரிந்து கொள்ள உதவுவதும் தான் கூட்டத்தின் நோக்கமாக இருந்தது. காலை சத்சங்கத்திற்குப் பிறகு, சில அப்யாசிகள் உரையாற்றினர். பின், அப்யாசிகளும் குழந்தைகளும் கலை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர்.

பிற்பகலில், 35 புதிய ஆர்வலர்களுக்காக, வரவேற்புக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. மதிய உணவு வேளைக்குப் பிறகு, மாஸ்டரின் வீடியோ ஒளிபரப்பப்பட்டு, அதனைத் தொடர்ந்து இருந்த வினா விடை நிகழ்ச்சியில், அப்யாசிகளால் எழுப்பப்பட்ட பொதுவான கேள்விகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. பசவகல்யாண் அப்யாசிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியானது, மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

### குழந்தைகள் நிகழ்ச்சி, தும்குண்டா, ஆந்திரப்பிரதேசம்

அக்டோபர் 6 மற்றும் 27ம் தேதிகளில், ஒரு இளம் தன்னார்வ குழு, மண்டல ஆசிரமத்தில், 45 குழந்தைகளுக்கான முழு நாள் நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது. 6ம் தேதியன்று, மையப்பொறுப்பாளர், ஆசிரமம், அனைத்து குழந்தைகளும் சகோதரத்துவ சூழ்நிலையில் வளர்வதற்கான ஒரு இடம் என்பதை வலியுறுத்தினார். அவர், குழந்தைகள் ஆசிரமத்தில் களிப்புடனும், ஒழுங்குமுறையுடனும் இருக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார். குழந்தைகள் ஆசிரமத்தில் பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்டு, தன்னார்வர்களுடன் உரையாடி அங்குள்ள பொருள்கள் பற்றி தெரிந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து சிறு நாடகமும் பொக்கிஷ வேட்டையும் இருந்தது.

27ம் தேதியன்று, செடிகள் பற்றிய சிறிய துவக்க நிகழ்ச்சிக்குப்பின், குழந்தைகள் அன்புடன் கன்றுகள் நடுவதை பார்க்க இனிமையாக இருந்தது. குழந்தைகள், மாஸ்டர் ஒமேகாவில் வழங்கிய உரையைக் கேட்டனர். மதிய உணவிற்கு செல்லும் முன் பலூன் நடனத்தை நன்றாக அனுபவித்தனர். பிறகு அவர்கள் அலங்கரித்திருந்த தீபங்கள், அப்யாசிகளுக்கு, தீபாவளிப் பரிசுகளாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

### புரிந்துகொள்ளல், அனுபவம் மற்றும் வெளிப்படுத்துதல், பெங்களூர்



இந்நிகழ்ச்சி, ஆன்மீக விஷயங்களில், அப்யாசிகளின் எழுதும் திறனை ஆய்ந்து, வெளிக்கொணரும் பொருட்டு, பனசங்கரி ஆசிரமத்தில், நவம்பர் 24 ம் தேதி அன்று, ஏற்பாடு செய்யப்பட்டது. கொடுக்கப்பட்டிருந்த பட்டியலில் இருந்து ஒரு பொருளைத் தேர்வு செய்து, மிஷனின் புத்தகங்களைப் படித்த பிறகு, கட்டுரை ஒன்றை எழுதும்படி அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். சுமார் 15 அப்யாசிகள் தங்கள் படைப்பை 100 அப்யாசிகளுக்கு முன்னிலையில் வழங்கினர். அவர்களின் முயற்சி பங்கேற்பாளர்களால் பாராட்டப்பட்டது. பங்கேற்பாளர்கள், இந்நிகழ்ச்சி மிஷனின் புத்தகங்களைப் படிப்பதிலும், மாஸ்டரின் நினைவில் இருக்கவும் மிகவும் உதவியது என்பதை வெளிப்படுத்தினர்.

## இளைஞர் நிகழ்ச்சிகள்

### திருச்சி, தமிழ்நாடு



நவம்பர் 10 மற்றும் 11ம் தேதி நிகழ்வுக்காக, திருச்சி ஆசிரமமானது, பேரார்வமுள்ள இளைஞர்களின் இல்லமாகத் திகழ்ந்தது. காலை சத்சங்கத்திற்குப் பிறகு, சகோ.ராஜேஷ் ரத்தோட் அவர்கள், "ஆன்மாவின் பயணம்" என்ற கருத்துரையை வழங்கினார். பங்கேற்பாளர்களுக்கு, தன்னாய்வு முறையிலும், எண்ணங்களைத் தூண்டக்கூடிய வகையிலும் ஒரு வினாத்தொகுப்பு வழங்கப்பட்டது. மற்ற நிகழ்ச்சிகள், வீடியோ பதிவுகளின் மூலம் விளக்கமளித்தல், 'உங்கள் இதயத்தின் குரலுக்கு செவி சாயுங்கள்' என்ற கலந்துரையாடல் நிகழ்வு, மாஸ்டர், மிஷன் மற்றும் பயிற்சி முறை குறித்த வினாடி-வினா நிகழ்வு, மற்றும் 'இளமைப்பருவம்- முன்னேற மற்றும் முயற்சிக்கு உகந்த காலம்' என்ற புத்தகத்திலிருந்து ஒரு தொகுப்பு வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கி இருந்தன. இந்நிகழ்ச்சியானது மாலை சத்சங்கத்திற்குப் பிறகு நிறைவு பெற்றது. ஆழமான நன்றியுணர்வினையும், இணக்கமான உணர்வினையும் பங்கேற்பாளர்கள் உணர்ந்தனர்.

### ஸ்ரீ கங்கா நகர், ராஜஸ்தான்

15 அப்யாசிகள் கலந்துகொண்ட ஒருநாள் இளைஞர் நிகழ்ச்சியானது, ஸ்ரீ கங்கா நகர் மையத்தில் நடந்தது. எண்ண சக்தி நம்மிடையே எவ்வாறு செயல்படுகிறது; எண்ண சக்தியானது நம் வாழ்க்கையில் ஏற்படுத்தும் விளைவுகள், நமது எண்ணங்களை மாற்றியமைப்பதன் மூலம், நமது எதிர்காலத்தை எவ்வாறு கட்டமைக்க முடியும் என்பதைப் பற்றிய, எண்ணங்களின் வலிமை குறித்த "The Secret" என்ற ஆவணப் படத்தை அவர்கள் பார்த்தனர். ஆகையினால், யாராக ஆக வேண்டும் என்பது குறித்து நிச்சயம் நாம் சிந்திக்க வேண்டும்.

பல்வேறு தலைப்புகளில் இருந்து எடுக்கப்பட்ட வினாடி-வினா எழுதப்பட்ட துண்டுக் காகிதங்கள் ஒவ்வொரு அப்யாசிகளிடத்தி லும் விநியோகிக்கப்பட்டது. ஒவ்வொரு அப்யாசியும் தனது சொந்த அனுபவம் மற்றும் அறிவு சார்ந்த பல்வேறு கோணங்களில் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தினர். நமது அன்றாட பயிற்சிக்கு உதவக்கூடிய வகையில், நமது அறிதலை மேம்படுத்தும் புதிய சிந்தனைகளும், பல்வேறு விளக்கங்களும் வெளிப்பட்டன.




### திருப்பூர் இளைஞர் குழுவின் மணப்பாக்கம் வருகை

செப்டம்பர் 13 முதல் 15 வரை, சுமார் 188 அப்யாசிகள் திருப்பூரிலிருந்து மணப்பாக்கத்திற்கு வருகை தந்தனர். பயிற்சி மற்றும் ஆன்மீக முன்னேற்றம் குறித்த நிகழ்வுகளிலும், மணப்பாக்கத்தின் மூத்த அப்யாசி களுடனான வினா-விடை நிகழ்வுகளிலும் அவர்கள் கலந்து கொண்டனர். 14, 15ம் தேதிகளில் அவர்கள் மாஸ்டரைச் சந்தித்து, அவருடன் சிறிது நேரத்தைச் செலவிட்டனர். அனைத்து அப்யாசிகளும் பேரார்வம் உள்ளவர்களாகவும், புதிய ஆற்றலால் நிரப்பப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர்.

### உறவுமுறைகள் குறித்த நிகழ்ச்சி, கொல்கத்தா

நவம்பர் 24 அன்று, கொல்தத்தா, பாபூஜி நினைவு ஆசிரமத்தில், "சகஜ மார்க்கத்தின் பார்வையில் உறவின் முறைகள்" என்ற இரண்டு மணி நேர நிகழ்ச்சியை சகோதரி. ஸ்நேகல் தேஷ் பாண்டே அவர்கள் நடத்தினார். உறவுமுறை என்றால் என்ன? அதன் முக்கியத்துவம், மேலும் மேலும் கொடுப்பதன் மூலம் நமது உறவுமுறைகளுக்குள் ஒத்திசைவைக் கொண்டுவருதல் மற்றும் "மற்றவருடன் நம்மை இணைத்துக் கொள்ளும்" மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்து அவர் விளக்கினார். இந்த நிகழ்ச்சியின் பொழுது, பங்கேற்பாளர்கள் அனைவரும், மகிழ்ச்சியாக இருந்த தருணங்களையும், சிறப்பாக விளங்கிய தருணங்களையும் பட்டியலிட்டனர். உறவுமுறையின் வகைகள் குறித்து விளக்கும் வகையில் ஒவ்வொரு குழுவினருக்கும் ஒரு வீடியோ காண்பி க்கப்பட்டது. மேலும் நேர்மறை மற்றும் எதிர்மறை பார்வைகள் மற்றும் ஒவ்வொரு உறவுமுறையின் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. நி பந்தனையற்ற அன்பு, பற்றற்று இருத்தல், நம்பிக்கை, விசுவாசம், பொறுப்பு, பணிவு, இணைந்திருத்தல், பொறுமை மற்றும் சகி ப்புத்தன்மை போன்ற பண்புநலன்கள் அனைத்தும் அந்த வீடியோத் தொகுப்பில் பிரதிபலித்தது. இதயத்தின் பரந்த ஆற்றல் குறித்த ஒலிஅலை அதிர்வுத்தன்மை சோதனையுடன் ( HEART- Heart Energy Amplitude Resonanace Test) இந்நிகழ்வானது முடிவடைந்தது. மேலும் Heart's Code என்ற புத்தகம் வாசி ப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டது. வெற்றிகரமான உறவுமுறைக்கு தேவைப்படும் முக்கியமான குணநலன்களைத் தன்னுள் உருவாக்கிக் கொள்வதற்கு, பங்கேற்பாளர்களுக்கு இந்நிகழ்ச்சி உதவியாக இருந்தது.



# துண்டு செய்திகள்

### பொள்ளாச்சி, தமிழ் நாடு

டிசம்பர் 1ம் தேதி, சகோ. P.V. அருணாசலம் மற்றும் சகோதரி சுமதி, ஒரு முழு நாள் நிகழ்ச்சியை நடத்தினர். காலையில், சீட்டெடுத்துப் பேசுதலும், மாலையில் வினா விடை நிகழ்ச்சியும் இருந்தன. அப்யாசிகள், தங்கள் சாதனாவில் ஒழுங்காகவும், உண்மையாகவும் இருந்து, ஆன்மீக வளர்ச்சி பெறத் தேவையான பெரும் ஆர்வத்தையும், தீர்மானத்தையும் அவர்களது இதயங்களில் பெற, இந்நிகழ்ச்சி உதவியது.





### துர்க், சத்தீஸ்கர்

அக்டோபர் 2ம் தேதியன்று, துர்க் மையத்தில் நடந்த, ITP நிகழ்ச்சியின் ஒரு வகுப்புக் கூறான "சுத்திகரிப்பு" என்ற பகுதியில், 32 அப்யாசிகள் பங்கேற்றனர். தங்கள் பயிற்சியின் போக்கில் ஏற்பட்ட விலக்கங்களை இனம் கண்டு கொண்டு, நமது வழிமுறையில், சுத்திகரிப்பைப் பற்றிக் கூறியுள்ளவற்றை, மேலும் நன்றாகப் புரிந்து கொள்ள, இந்த நிகழ்ச்சி உதவியதாக அனைவரும் உணர்ந்தனர்.



### ஜபல்பூர், மத்திய பிரதேசம்

ரேவாவின், சைனிக் பள்ளி மற்றும் ஜெய் ஜோதி பள்ளியின் 6-12 வகுப்பு வரையிலான மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, சுய மேம்பாடு, ஆன்மீகம் மற்றும் நன்னெறி அடிப்படையிலான கல்வி பற்றிய VBSE நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. சாதனையும் ஊக்கமும், பரத் தோற்றம், ஆன்மீகம் முதலியவற்றைப் பற்றியதான இந்நிகழ்ச்சி, மாணவர்களாலும், பணியாளர்களாலும் பாராட்டப்பட்டது. நிகழ்ச்சியின் முடிவின் போது, சகஜ மார்க்கத்தைப் பற்றிய கேள்விகளை பங்கேற்றவர்கள் கேட்டு அறிந்தனர்.

### தாணே, மகாராஷ்டிரா

நவம்பர் 16 அன்று, தாணே, கோல்ஷே ரோடு, நகைப்போர் சங்கத்தில், 4 பிரிபெக்ட்களால், ஹிந்தியில் நடத்தப்பட்ட ஒரு வரவேற்புக்கூட்டத்தில், 27 பேர் பங்கேற்றனர். தியானம், இறந்த, எதிர் காலத்தைப் பற்றிய கவலையில்லாமல், நிகழ் காலத்தில் வாழக் கற்றுக் கொடுப்பதன் மூலம், மன அழுத்தமற்ற நிலையில் நம்மை இருக்க வைக்கிறது என்று விளக்கப்பட்டது. பங்கேற்றவர்கள் சிட்டிங்கின் தேவையை உணரும் போது, அவர்களுக்கு சேவை புரிய ஆயத்தமாக இருப்பதாக பிரிபெக்ட்கள் கூறினர்.





### கூர்க் அப்யாசிகளின் மணப்பாக்கம் வருகை

நவம்பர் 19-23ல், 45 க்கும் மேற்பட்ட கூர்க் அப்யாசிகள், மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு வருகை புரிந்தனர். கூர்க் ஆசிரமம் வளர்ச்சியடைந்து வருவதைக் கேட்டு, மாஸ்டர் மிக்க மகிழ்ச்சி யடைந்தார். அப்யாசிகள் மாஸ்டருக்கு, கூர்கின் பாரம்பரிய தலைப்பாகை, மற்றும் தங்க விளிம்பு கொண்ட வெள்ளிக் கத்தி ஆகியவற்றைப் பரிசாக வழங்கினர்.

அதன் பின்னர் மாஸ்டர் சத்சங்கம் வழங்கினார். அம்மையம், 20 வருடங்களுக்கு முன்பே தொடங்கப்பட்டிருந்த போதிலும், சமீப காலத்தில் தான் வளர்ச்சியடையத் துவங்கியுள்ளது. இப்போது, மடிக்கேரி, கார்குண்டா மற்றும் விராஜ்பேட் ஆகிய இடங்களில் இள்ள அப்யாசிகளின் இல்லங்களில் 3 சத்சங்க மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## திருச்சி, தமிழ்நாடு



அப்யாசிகளை, மிஷனின் இலக்கியத்தை வாசிக்கத்தூண்டும் நோக்கத்துடன் 'இலக்கியத்திலிருந்து கற்றல்' என்ற நிகழ்ச்சி செப்டம்பர் 2013 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆர்வத்தையும் புதுமையையும் உண்டாக்கும்பொருட்டு, ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையன்று வினாடி வினா வடிவிலும், அந்த மாதத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகத்திலிருந்து மாஸ்டரின் செய்தியை பகிர்ந்துகொள்வதன் மூலமும், ஒரு முழுநாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுகிறது. சத்யோதயம், என் மாஸ்டர் மற்றும் மனிதனின் பரிணாம வளர்ச்சியில் மாஸ்டரின் பங்கு ஆகியன இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட சில புத்தகங்களாகும்.

இந்நிகழ்ச்சி பல அப்யாசிகளை மிஷனின் இலக்கியத்தை வாசிக்கும்படி ஊக்கமளித்துள்ளது. புத்தக விற்பனை அதிகரித்திருப்பதில் இதற்கான ஆதாரத்தை காணலாம். இது பங்கேற்பாளர்களை மனம் திறந்து தங்கள் ஆன்மீக வளர்ச்சியிலான சொந்த அனுபவங்களை பகிர்ந்துகொள்ளச் செய்துள்ளது. அந்த புத்தகத்தைப் பற்றிய அவர்களது புரிந்துகொள்ளுதல் பல்வேறு பரிமாணங்களில் அதிகரித்திருக்கிறது. குழு மனப்பான்மை, சகோதரத்துவம் மற்றும் ஆன்மீகத்தை குறித்த மேலும் அதிக மனங்குவிப்பு ஆகியன இந்நிகழ்ச்சியின் விளைவாக அமைந்தன.

## சிக்மகளூர், தென் கர்நாடகம்





சகோ. மோகன்தாஸ் ஹெக்டே அவர்கள், அக்டோபர் 24 - 26 சிக்மகளூரிலுள்ள AIT கல்லூரி, BSNL அலுவலகம், யுரேகா அகாடெமி, மேஸ் கல்லூரி மற்றும் TMS கல்லூரி ஆகிய இடங்களில் ஒரு வரவேற்புக் கூட்டத்தொடரை நடத்தினார். ஆன்மீகத்தின் அவசியம் மற்றும் மனவுளைச்சலற்ற வாழ்க்கைக்கு தியானத்தின் முக்கியத்துவம் ஆகியனவே இந்நிகழ்ச்சிகளின் முதன்மை கருப்பொருளாக இருந்தது.


26ம் தேதி அன்று, அவர் ஒரு இல்லக் கூட்டம் நடத்தினார். அதில், சிக்மகளூர் மையத்தின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வழிகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

27ம் தேதி அன்று, லயன்'ஸ் பவன்-ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரை நாள் நிகழ்ச்சி ஒன்றில் காடூர் மற்றும் ஹரிஹரபுரா ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகள் சேர்ந்துகொண்டனர். சகோ. ஹெக்டே 'சமன்பட்ட வாழ்வு' என்பதைப் பற்றி பேசிவிட்டு, மாஸ்டரின் வாழ்விலிருந்து உதாரணங்களைக் கொண்டு அதை விளக்கினார். இதனைத் தொடர்ந்து, நமது பயிற்சியில் எதிர்கொள்ளப்படும் தடங்கல்களை எவ்வாறு வெற்றிகொள்வது என்பதைப் பற்றி ஒரு குழு கலந்துரையாடல் நடைபெற்றது. சகோ. ரமாகாந்த், தான் அப்யாசி ஆன பிறகு பெற்ற அனுபவங்களை பகிர்ந்துகொண்டார். பங்கேற்பாளர்களுக்கு இந்நிகழ்ச்சி பிடித்திருந்தது. மேலும் இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற எதிர்நோக்கியுள்ளனர்.

## புதிய வெளியீடுகள்





### DVD க்கள்

ஹார்ட் ஸ்பீக் 2011 - பாகம் 2 ஆங்கிலம்
த நீட் ஆ~ஃப் த டைம் - ஆங்கிலம்
பேரன்ட் ஹுுட் - ஆங்கிலம்


### புத்தகங்கள்




சகஜ மார்க்க கோட்பாடுகள்
பாகம் 13
தமிழ்




லவ் அண்ட் டெத்
தெலுங்கு




ஃபுரூட் ஆ~ஃப் த ட்ரீ
ஹிந்தி




அப்யாசி டைரி
ஹிந்தி



த ஸ்பைடர்ஸ் வெப்
பாகம் - 1
மலையாளம்

## யோகாசிரமம், சிலிகுரி, மேற்கு வங்காளம்

## ஒளி மையம்





"இயற்கையின் எல்லா வளங்களையும், அது உடல் நலமானாலும் சரி, செல்வ வளமானாலும் சரி, புகழானாலும் சரி, செழுமையானாலும் சரி, எதுவாக இருந்தாலும், மீட்டுக் கொள்ள முடியும் ஆனால் காலத்தை மீட்க முடியாது. "

பார்த்தசாரதி ராஜகோபாலாச்சாரி, ஜூலை 11, 2010, சிலிகுரி





சிலிகுரி என்பது மேற்கு வங்காளத்தின் வடக்குப் பகுதியில் இமயமலைத்தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். அதனுடைய அமைவிடத்தின் காரணத்தினால் வடகிழக்குப் பகுதியின் வெளிப்புற வாயிலாக இருப்பதோடல்லாமல், நேபாளம், வங்கதேசம் மற்றும் பூடான் ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதியாகவும் பங்கு பெற்றுள்ளது. சோபாஹிதா என்னும் கிராமத்தில், 4.83 ஏக்கரில் அமைந்துள்ள ஆசிரமமானது, நகரப் பகுதியிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவிலும், இரயில் நிலையத்திலிருந்து 8 கி.மீ தொலைவிலும், விமான நிலையத்திலிருந்து ஏறக்குறைய 25 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது. இந்த ஆசிரமம் ஒரு இயற்கையழகைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கிருந்து பனிப்போர்வை போர்த்தியுள்ள மலைத்தொடரின் சிகரமான கஞ்சன்ஜங்காவை நாம் காண முடியும்.

மாஸ்டர் இந்த ஆசிரம நிலத்தை, 2009 ஆம் வருடம், நவம்பர் மாதம் 2 ஆம் தேதி, தான் காங்டாக் செல்லும் சமயத்தில் பதிவு செய்தார். அவர் திரும்பி வரும் போது அங்கே ஆசிரமம் கட்டுவதற்கு அனுமதியளித்தார். அந்த ஆசிரமம் சுமார் எட்டு மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது. அந்த ஆசிரமம் தன்னுள், மாஸ்டர் காட்டேஜையும், 3000 ச.அடி பரப்பளவில் உள்ள தியானக்கூடத்தையும், சுமார் 300 அப்யாசிகள் வசதியாகத் தங்குவதற்கு ஏதுவாக உள்ள அப்யாசிகள் தங்கும் அறையையும், ஒரு கழிவறைக் கட்டிடத்தையும், ஒரே சமயத்தில் சுமார் 250 அப்யாசிகள் அமர்ந்து உணவருந்தக் கூடிய உணவு பரிமாறும் அறையையும் கொண்டுள்ளது. அங்கு சாலைகள் போடப்பட்டு, அநேக மரங்களும் நடப்பட்டுள்ளன.

மாஸ்டர் அந்த ஆசிரமத்தை 2010 ஆம் வருடம், ஜூலை மாதம் 11 ஆம் தேதியன்று, வடகிழக்குப் பகுதி மற்றும் நேபாளம் ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த சுமார் 600 அப்யாசிகளின் முன்னிலையில் திறந்து வைத்தார். சத்சங்கத்திற்குப் பிறகு மாஸ்டர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் அந்தப் பகுதியில் மிஷனின் வளர்ச்சிக்காக அந்த ஆசிரமத்தை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசினார். வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று மண்டல ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்றும், அதுவும் சிறப்பாக, மலைப்பகுதிகளில் உள்ள அப்யாசிகளுக்காக நடத்த வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார். அந்த கூட்டங்களில் அப்யாசிகள் தங்குவதற்கும், உணவிற்குமான செலவுகள் சகஜ மார்க்க ஆன்மீக ஸ்தாபனத்தால் (SMSF) ஏற்றுக் கொள்ளப்படும். இந்த ஆசிரமம் துவங்கிய நாளிலிருந்து நமது மாஸ்டர்களின் பிறந்த நாள் விழாக்கள் சிலிகுரி மற்றும் அருகாமையில் உள்ள மையங்களின் அப்யாசிகளுக்காக ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்டு வருகின்றன.





To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2013 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.